1975 மார்ச் 6]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்தக் கார்ப்பரேஷன் அதிகார வரம்பிற்குள் இருக்கும் காட்டிலாகா நிலங்களில் தென்னையும் பயிரிட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: முக்கியமாக நான் சொன்ன மூன்று பொருள்கள் பயிரிடப்படுகின்றன. தென்னை பயிரிடப்படக் கூடிய இடம் இருக்குமானால் நிச்சயமாகப் பரிசிலனை செய்து எடுத் துக் கொள்ளலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஃபாரஸ்ட் பிளான்டேஷன் கார்ப்ப ரேஷன் ஆரம்பித்த காரணத்தால் ஏற்கெனவே வனத் துறையில் பணியாற்றிய ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருந்ததே, அப்படி யாராவது பாதிக்கப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன். தலைவரவர்களே, பாதிக்கப் படவில்லை, சற்று அதிகமாகச் சலுகை பெற்றிருக்கிறார்கள்.

Cashew Plantations.

* 215 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the names of places in the forest areas in the State where cashew plantations have been raised in 1973-74?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அறந்தாங்கி, உடையார் பாளையம், மதுராந்தகம், திருவள்ளூர், செங்கற்பட்டு ஆகிய பகுதி களில், 1,449 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: The very name coconut, i.e., the fruit of the south, indicates that the entire south is fit for cultivation of coconut. May I know from the Hon. Minister why the doubts whether this area is fit or that area is fit? May I know whether he will arrange to make an investigation and see that every area is cultivated with coconut?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முந்திரி பற்றிய கேள்வி, தென்னை பற்றிய கேள்வி அல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: முந்திரிப் பயிர் விவசாயி களுக்கு அரசாங்க உதவி செய்கிற செயற்குறிப்பு இருக்கிறதா? இல்லையென்றால் இனிமேலாவது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இது விவசாயத் துறை அமைச்சரிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி. இது வனத் தோட்டக் கழகத்தின் மூலமாக முந்திரி பயிரிடப்படும் திட்டமாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நமது மாநிலத்தில் முந்திரிப் பருப்பு ஆலைகள் பல இருக்கின்றன. ரா மெட்டீரியல்ஸ் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. அந்தச் சிரமத்தினைத் தீர்க்கும் வகையில் இந்தத் திட்டத்தை மாநில முழுவதும் விஸ்தரித்து முந்திரியை அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திட்டத்தட்ட 20,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. 11,000 ஹெக்டேர் பரப்பளவில் பலன் தந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு 10,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடும் திட்டம் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : முந்திரிப் பயிர் செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. முந்திரிக் கொட்டைகளை எடுக்கும்போது அதிகாரிகள் ஏலம் விடுகிறார்கள். அப்படி ஏலம் விடும்போது வேறு யாராவது உடன் இருக்கிறார்களா? அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : புகார்களோ, குற்றச் சாட்டுகளோ வந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது நம்முடைய கடமை. குறிப்பிட்ட புகாரைச் சொன்னால் விசாரித்து தக்க விளக்கம் தர இயலும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நம் நாட்டில் இருக்கும் முந்திரித் தோட்டங்களில் விளைவு மிகக் குறைவாக இருக்கும் காரணத்தால் அரசே காட்டு இலாகா தோட்டங்களில் மாடலாக முந்திரியைப் பயிரிட்டு அதிக அளவு பலன் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பூச்சி மருந்து அடித்தல், உரம் போடும் முறைகளைக் கையாளுதல் போன்றவற்றின் மூலம் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைத்து வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ரெவின்யூ ஃபாரஸ்டுகளை எல்லாம் வனத் துறையில் எடுத்து அந்த இடங்களில் முந்திரிப் பயிர்கள் வைக்க முயற்சி எடுக்கப்படுமா? எல்லா ரெவின்யூ ஃபாரஸ்டுகளையும் எடுத்து இத்தகைய திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் . எல்லா ரெவின்யூ ஃபாரஸ்டுகளையும் நாம் உடனடியாக எடுத்து காடு வளர்க்கும் திட்டத்தைச் செய்ய வேண்டுமென்றால் நிதிப் பிரச்சினை வந்து

1975 மார்ச் 6]

விடுகிறது. ஆண்டுத் திட்டங்கள் மூலமாக எவ்வளவு பணம் ஒதுக்க முடியும் என்பதைக் கணக்கில் கொண்டு அந்த அளவில் புதிய பகுதிகளை எடுத்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு ஆண்டும் நிதி வசதிக்கேற்ப ரெவின்யூ பாரஸ்டுகளை அப்போதைக்கப்போது எடுத்துக்கொள்ளலாம்.

அருள்திரு சாரங்கபாணி கோயில் தேர்

* 216 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குடந்தை திரு சாரங்கபாணி திருக்கோயில் திருத் தேரினைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) திருக்குடந்தை அருள்மிகு திரு சாரங்கபாணி திருக் கோயில் திருத்தேரினை புதுப்பிக்க சுமார் ரூ. 3 லட்சம் செலவாகுமாத லால் இதற்கென ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்படவுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தத் தேரினைப் புதுப்பிக்கும் திட்டம் நீண்டகாலமாகப் பரிசீலனையில் இருக்கிறது. எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நீண்டகாலப் பரிசீலனையில் இருப்பதாகத் தகவல் இல்லை. 1973-ம் ஆண்டில் நான் தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது உள்ளூரில் இருக்கும் அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள் என்னிடத்தில் தெரிவித் தார்கள். உடனடியாக அதற்குப் பொதுப் பணித் துறை பொறி யாளர்கள் மூலமாக மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள். போதுமான நிதிவசதி கோயிலுக்கு இல்லாத காரணத்தால் தனியாகக் குழு அமைக்கப்பட்டு அதனைச் செய்ய வேண்டுமென்று கருதி தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.